தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்.001358/எம்1/இ1/2024, நாள் 26.07.2024

பொருள்: பள்ளிக் கல்வி – அரசுப் பள்ளி மாணவ/மாணவியருக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பில் 7.5% இட ஒதுக்கீடு பெறுவதற்கு உறுதி சான்றிதழ் (Bonafide Certificate) அளித்தல் குறித்து அறிவுரைகள் வழங்குதல் சார்பாக.

பார்வை: 1.அரசாணை (நிலை) எண்.438 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, நாள் 29.10.2010.
2. அரசாணை(நிலை) எண்.167 உயர் கல்வித்துறை, நாள் 31.08.2021.
3. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.001358/எம்1/இ1/2024, நாள் 26.07.2024.

*****

பார்வை 1 மற்றும் 2 ல் காணும் அரசாணையின்படி அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவ/மாணவியருக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பில் சேருவதற்கு 7.5% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதற்காக அம்மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளில் உறுதி சான்றிதழ் (Bonafide Certificate) பெறுவதற்கு அணுகும் போது அவர்கள் 6-8 ஒரு பள்ளியிலும் 9-12 வேறு பள்ளியிலும் பயின்றுள்ள நிகழ்வுகளில் முன்னர் பயின்ற பள்ளி சார்பான விவரங்களை கல்வி மேலாண்மை தகவல் மைய தளத்திலிருந்து (EMIS) பெற்று அதனடிப்படையில் மேற்படி உறுதி சான்றிதழை எவ்வித தாமதம் இன்றி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பார்வை 3ல் காணும் செயல்முறைகளில் அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மாணவர்களின் சார்பான விவரங்கள் EMIS ல் கீழ்கண்ட ஆண்டுகளில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளதாக தெரிகிறது :

2021-2022 ----------- 9,10,11. மற்றும் 12-ம் வகுப்புகள்

2022-2023 ----------- 8,9,10,11. மற்றும் 12-ம் வகுப்புகள்

2023-2024 ----------- 7, 8,9,10,11. மற்றும் 12-ம் வகுப்புகள்

மேற்கண்ட வகுப்புகள் சார்பான மாணவர்களின் விவரங்களை கல்வி மேலாண்மை தகவல் மைய தளத்திலிருந்து(EMIS) பெற்றுக் கொள்ளலாம் எனவும், ஏனைய வகுப்புகள்

சார்பான விவரங்கள் தேவைப்படின் அம்மாணவர்கள் முன்னர் பயின்ற பள்ளிகள் மூலமாக பெற்றுக் கொண்டு அதனடிப்படையில் உறுதி சான்றிதழ்(Bonafide Certificate) தாமதம் இன்றி வழங்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், இது சார்பாக தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் உரிய அறிவுரைகளை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்கள்

அனைத்து மாவட்டங்கள்.

நகல்

திரு. மகேஷ்,

Chief Technical Officer,

கல்வி மேலாண்மை தகவல் மையம் (EMIS),

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,

சென்னை-6.